# ஆத்ம ஜோதி



சுவாமி அபேதாநந்தா



# ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாத வெளியீடு ]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்

ஜோதி 13 || சார்வரி ஹூ பங்குனிமீ 1-ந்வ (13 3-61) || சுடர் 5

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | நாமஅபிருசி | 129 |
| 2 | வாழ்க! வாழ்க! | 130 |
| 3 | தோட்டியூர் தொண்டைமானூராயிற்று | 131 |
| 4 | இன்றையஉலகிற்கு எது தேவை ? | 133 |
| 5 | காந்திக் கிராமம் | 135 |
| 6 | மகாத்மாவின் மணிக்குரல் | 139 |
| 7 | பகவான் விரும்புவது பக்தி | 141 |
| 8 | சுத்தானந்தரின் கடிதங்கள் | 145 |
| 9 | வரவேண்டும் வள்ளி மணாளா | 150 |
| 10 | எல்லோரும் வாழவேண்டும் | 152 |
| 11 | உபநிஷத் உண்மைகள் | 157 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தாரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

" ஆத்ம ஜோதி நிலயம் " நாவலப்பிட்டி. [சிலோன்]


## நாம அபிருசி ஏற்படாவிடில் துர்ப்பாக்கியம்

நாம் ்ரு மகாரி பஹுதா நிஜஸர்வஸக்தி
ஸ்தத் ரார் பிதா நியமித; ஸமரணே ந கால;
ஏதாத் ருஸீ தவக் ருபா பகவன் மமாபி
துர்த் தை வமீத் ருஸமிஹாஜனி நானுராக;

— *சைதன்யர்.*

ஹே கிருஷ்ணு! உனக்கு அனந்தகோடி திருநாமங்கள் உண்டு. பக்தர்கள் உன்னிடங் கொண்ட பிரேமச் செறிவி ஞல் உன்னைப் பலபெயர்கள் இட்டு அழைக்கிறுர்கள். ஆகவே உனது நாமங்களில் ஒன்று உயர்ந்தது, மற்றது தாழ்ந்தது என்ற பாகுபாடல்லாது, எல்லா நாமங்களும் சமசக்தி உடைத்தா யிருக்கின்றன. உன்னை 'முருகா' என்று அழைத்தாலும் 'சிவா' என்ற அழைத்தாலும் 'சக்தி' என்றழைத்தாலும் இவற்றுள் வேற்றுமை ஒன் றுங் கிடையாது. மேலும் இன்னவர்தான் உன் நாமத்தை உச்சரிக்கவேண்டும், இன்னுர் உச்சரிக்கக் கூடாது என்ற எந்த விதமான நிபந்தனையுங் கிடையாது. பிறப்பு, இறப் புடையவர்கள் உன் நாமத்தை அவசியம் உச்சரித்தல் வேண்டும். பிறப்பு, இறப்புடையவர் அனைவரும் உன் நாமத்தை உச்சரிக்கும் அதிகாரம் படைத்தவர்கள். மக்க ளேயன்றி மாக்களும் உன் நாமத்தைச் சொல்வதற்கு அதிகாரமுடையவர்கள்தான். ஏ! கருணைக்கடலே நீ இவ்வ ளவு கருணை காட்டிய போதிலும், உன் நாமத்தைச் சொல்வது மிக எளிதாக இருந்த போதிலும், உன் நாமத் தைச் சொல்ல ஆசை ஏற்படவில்லையே! எனக்கு உன்னிட த்தில் அனுராகம் ஏற்படவில்லையே! இதற்குக் காரணம் என்னுடைய மஹா பாப சக்தியோ! ஏதோ தெரியவில்லை!!

— *அபேதானந்தர்.*

# வாழ்க! வாழ்க!!

(மதுரானந்தா வெள்ளிமலை)

கலிமலக் கடலைத் தாண்டிக்
    கடவுளின் பாதஞ் சேர
பொலிவுறு நாமம் ஒன்றே
    போதுமென் றறையுஞ் சுருதித்
தலையுறு தத்து வந்தான்
    தனியுருக் கொண்டு வந்த
அலகிலாப் பெருமைச் சாமி
    அபேதா னந்தர் வாழ்க!

ஐம்பதும் மூன்றுஞ் சேர்ந்த
    ஆண்டுநாள் கண்டு நாங்கள்
உம்பெயர் வாழ்த்து கின்றோம்
    ஊழிகள் தோறும் வாழ்வாய்!
எம் பெரு மானே! இன்பம்
    எழிலுருக் கொண்டு வந்த
அன்பனே அனந்த புரத்து
    அடிகளே வாழ்க! வாழ்க!!

பல் கோடிப் பெயர்கள் கொண்ட
    பரந்தாமன் பாதந் தன்னில்
பல் கோடி மலர்கள் தூவிப்
    பரவிடும் நெறியைக் காட்டி
புல் கோடிப் பாவந் தேய்த்து
    புண்ணியம் பெருக்கி நாட்டில்
ஒல் காத சீர்த்தி கொண்ட
    உத்தமன் வாழ்க! வாழ்க!!

மொழிவெறி மூண்டு நாட்டில்
    வேற்றுமை பெருகி நாளும்
அழிவுறு நெறியிற் செல்லும்
    அறிவற்ற மக்கள் தம்மை
மொழிபல பேசிப் பாடி
    மெய்ந்நெறி சாரு விக்கும்
பழுதறு பண்ணின் வேந்தன்
    பாரதி அடிகள் வாழ்க!



# தோட்டியூர் தொண்டைமானூராயிற்று

— ஆசிரியர் —

'குப்பையில் மாணிக்கம்' என்றொரு பழமொழி உண்டு குப்பைக் கிடங்கு கோயிலான விஷயம் கேள்விப் பட்டிருக்க மாட்டீர்கள். திருவனந்தபுரத்திலே பத்மநாத சுவாமி கோயிலுக்கு எதிராக நகர பஸ்வண்டி நிலையத்திற்குப் பக்கத்திலே சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பள்ளமான நிலம் இருந்தது. நகரத்துக் குப்பை யெல்லாம் அங்கே வந்து சேர்ந்தது. காலகதியில் அப்பள்ள நிலமும் மேடாகி விட்டது.

இன்று அம்மேட்டு நிலத்தில் அபேதாச் சிரமம் மிளிர்வதைக் காணலாம். அங்கு ஒரு பாலக்கிருஷ்ணன் கோயில் உண்டு. அந்த முரளீதரன் எல்லோரையும் மயக்கிவிடுவான். அவனுடைய புன்சிரிப்பிலே சொக்காதவர் கிடையாது. கோயிலின் முன்னிலையில் ஒரு மண்டபம். அங்கு எந்த நேரமும்

ஹரே ராம ஹரே ராம ராம
    ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே
    ஹரே

என்ற அகண்டநாம சங்கீர்த்தனம் ஒலித்தவண்ணமே உள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளாக மேற் குறித்த அகண்ட நாம பஜனை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அம்மண்டபத்தின் நடுவே ஒரு பெரிய குத்துவிளக்கு. அதில் ஏழுதிரிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏழுதிரிகளும் ஏழு உலகங்களைக் குறிக்கும், உருத்திரவீணை ஒன்றை ஒருவர் தோளில் சார்த்தியவண்ணம் நாமபஜனை செய்து கொண்டிருக்கின்றார். அவரின் பின்னே ஒருவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டு செல்வார். தூக்கிய வீணை ஏழு ஆண்டுகளாக நிலத்தில் வைக்கப் படவில்லை.

வீணையை வைத்திருப்பவர் நாரதராக எண்ணப்படுகின்றார். ஒவ்வொரு மணித்தியாலமும் இவ்விரண்டு பேராக ஆச்சிரமவாசிகள் இந்த அகண்ட நாமபஜனையைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். வீணையைப் பெறுபவர் வீணையைவைத்திருப்பவரைச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிய பின்னரே வீணையை பெற்றுக் கொள்ளுகின்றார். வீணையைக் கொடுத்தவரும் வீணையை வாங்கியவுடன் மறுபடி வணங்கிய பின்பே அப்புறஞ் செல்லுகின்றார்.

நாரதர் சப்த லோகங்களிலும் இம்மகாமந்திரத்தை ஒலிக்கின்றார் என்பதே இதன் பொருள்.

சுவாமி அபேதானந்தரின் உத்தம சிஷ்யர்களாக ஆச்சிரமத்தில் இருபதுக்குக் குறையாத சீடர்கள் சாதனை பயிலுகின்றனர். வாழ்வின் ஒவ்வொரு கணமும் ஆண்டவன் நம்பிக்கையிலேயே ஆச்சிரம வாசிகள் வாழ்ந்து வருகின்றனர். அதிகாலையிலே எழுந்து ஆச்சிரமவாசிகள் பஜனை செய்து கொண்டு தெருவழியே செல்லுகின்றனர். யாராவது ஒரு அன்பர் அவர்களை வரவேற்றுப் பிச்சையிடுகின்றார். அதுவே அவர்களுடைய அன்றைய உணவாகின்றது.

''பாடுவார் பசிதீர்ப்பாய்
பரவுவார் பிணிகளைவாய்''

இத்திருமுறைக் கருத்தில் ஆச்சிரம வாசிகள் அனைவருமே மிகுந்த நம்பிக்கை உள்ளவர்கள். உணவைப் பற்றிய கவலையோ வேறு கவலையோ ஆச்சிரம வாசிகள் எவருக்குமே இல்லை. ஆண்டவன் புகழைப் பாடவேண்டியதே அவர்கள் கடமை. கண்ணன் எப்படியோ அவர்கள் எல்லோருக்குமே உணவளித்துக்கொண்டிருக்கின்றான்.

சுவாமிகள் ஊர்தோறும் சென்று கீதை உபந்நியாசங்களும் கோடி அர்ச்சனைகளும் நடத்தி வருகின்றார்கள். இதனால் பல இலட்சக் கணக்கான மக்கள் ஆத்மீக வாழ்வில் முன்னேறி உள்ளனர். ஆச்சிரமத்திலே உள்ள பரந்த மண்டபத்திலே தினந்தோறும் பஜனையும் பாகவதம், கீதைபோன்ற சொற்பொழிவுகளும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

நகரத்து அசுத்தங்களையெல்லாம் ஏற்றுக் கொண்ட இடம் உலகத்துள்ள உள்ளங்களிலுள்ள அசுத்தங்களையெல்லாம் போக்குகின்ற தேவநாமாபதியை உற்பத்தி செய்யும் வைத்தியசாலையாக மாறியமை கலியுகத்தில் ஒரு விந்தையல்லவா?

அரன் நாமமே சூழ்க.

உடல், பொருள், ஆவி, பொறிகள், மனம், புத்தி இவைகளை ஆண்டவனிடம் ஒப்படைத்து, கள்ளங் கபடமற்ற குழந்தைபோல் வாழ்பவன் பக்தன்.



## இன்றைய உலகிற்கு
# எது தேவை?

சுவாமி அபேதாநந்தா

ஆண்டவனை அடைவதற்கு மகான்கள் கண்ட மார்க்கங்கள் பலப்பல. அவைகள் எல்லாவற்றிலும் சிறந்த மார்க்கம் பக்தியே. 'நான்' என்னும் அகந்தைதான் இறைவனை நாம் கண்டு அனுபவிக்க முடியாதபடி மறைத்துக் கொண்டிருக்கிறது. மற்ற எந்த மார்க்கத்தை அனுஷ்டித்தாலும் இவ்வகந்தை அழியாது. பக்தி ஒன்றினால் தான் அகந்தை அடியோடு அழியும். உலக விஷயங்களிலுள்ள பற்றுக்களெல்லாமகன்று இன்பம் பெருக வேண்டுமாயின் பக்தித்தாயின் கடைக்கண்பார்வை நம்மீதுவிழ வேண்டும். நரை திரை மூப்பு சாக்காடு முதலிய மாற்றங்களுக்குட்பட்ட உடலுணர்வை ஒழித்து மனிதனை உண்மை மனிதனாக்குவது பக்தி. உண்மை மனித இயல்பு தான் தெய்வீக வாழ்க்கை. ஆக தெய்வீக வாழ்க்கையின் உயர்நிலையாய் விளங்குவது பக்தி.

அறம், பொருள், இன்பம் வீடெல்லாம் பக்தி வெள்ளத்தில் கரைந்துவிடும். பக்தித்தாயின் அருள் கிட்டிவிட்டால் ஒருவன் வாழ்வைப்பற்றியோ, அல்லது மற்றெதைப் பற்றியோ ஆவது கவலைப்படுவதில்லை. பக்தியொழிந்த மற்ற மார்க்கங்களெல்லாம் உலகியல் வாழ்வைச்.செம்மைப்படுத்துவனவேயாம் ஆனால் பக்தித்தாய் உலகியல் வாழ்வை நிராகரித்து, மேலாம் தெய்வ வாழ்வைக் காட்டுகின்றாள்.

சாத்திரங்கள் பலகற்று ஞானம் பெறுவது பக்தி பண்ணுவதற்கேயாம். ஏனெனில் சாத்திரம் அல்லது குருவின் மூலம் கிடைக்கும் ஞான ஒளி புத்தியாம் குகைக்குள் இருக்கும் இருளை ஓட்டி ஆங்கு வீற்றிருக்கும் இறைவனை தரிசிக்க உதவலாம். ஆனால் இந்தத்தரிசனம் நிரந்தரமாகக் கிடைக்கவேண்டுமாயின் பக்தித்தாயின் அருள் வேண்டும். சாத்திரங்கள் படிப்பதற்கும் குருவருள் பெறுவதற்கும் அதன் மூலம் புத்திக்குகைக்குள் ஞான தீபத்தை ஏற்றுவதற்கும் காரணமாயிருப்பவர்கள் பக்தித் தாயின் தோழிகளாகிய சாலோக, சாஷ்டி, சாமீப, சாரூப, சாயுச்சியம் என்னும் ஐந்து முத்திகளுமாவர். ஆனால் முத்திகளை நம்பி,

இருளகன்ற தென்ற அகந்தை வந்துவிட்டால் முத்தி களா லேற்றப் பெற்ற ஞான தீபம் அவிந்துபோம். பகவான் வியாசர், கர்காச்சாரியர், சாண்டில்யர், நாரதர் முதலியோரால் புகழ்ந்து பாடப் பெறும் பக்திமார்க்கம் எல்லா மார்க்கங்களிலும் சாலச் சிறந்த தாயிருக்கிறது. உலகெலாம் பக்தித் தாயின் பாலருந்தி இன்பம் பெறும் நன்ளுள் நெருங்கி விட்டது. மதங்களெல்லாம் மறைந்து பக்தி மதம் பெருகும் காலம் நெருங்கிவிட்டது. பொருமைக்கும் ஏனைத் துன்பங்களுக்கும் காரணமான ஜாதி பேதங்கள் தொலைந்து பக்தி ஜாதிவளரப் போகிறது. ஏக ஜாதி, ஏக மதமான பக்தி அன்னை நம்மை நோக்கி அதி சீக்கிரமாய் வந்து கொண்டிருக்கிருள். இதற்குச் சந்தேகமில்லை. எல்லா மார்க்கங்களையும் விழுங்கி ஏப்பம் விடப் போகிருள் பக்தி தேவி. அச்சம் அகற்றி வாய்திறந்து உரக்கப் பாடுவோம். ஆடுவோம். ஆனந்த வெள்ளத்தில் மூழ்குவோம்.

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ணகிருஷ்ணஹரேஹரே"
அன்பு, இன்பம், அமைதி!

---

## ஆத்மஜோதி அச்சக நன்கொடைகள்

| | | ரூபா. சதம் |
|---|---|---|
| | சென்ற மாதக் கணக்கு | 1840 00 |
| திரு. | நா. கந்தசாமி, பண்டாரவளை | 17 00 |
| திரு. | வ. கார்த்திகேசு, வியாபாரிமூலை | 12 00 |
| திரு. | ஆ. இ. மருதநாயகம் படல்கம | 10 00 |
| திரு. | சோ. சிவக்கொழுந்து, பம்பலப்பிட்டி | 10 00 |
| திரு. | சு. சுப்பிரமணியம், கோப்பாய் | 5 00 |
| திரு. | P. M. யாதப்பன் கடவளை | 2 00 |
| திரு. | P. M. விஜப்பெருமாள் கடவளை | 2 00 |
| திரு. | S மாணிக்கம் கடவளை | 1 50 |
| திரு. | K. கிருஷ்ணன் கடவளை | 1 00 |
| திரு. | A. அங்கம்மா கடவளை | 1 00 |
| திரு. | D. சீலாவதி கடவளை | 1 00 |
| திரு. | R பெரியசாமி கடவளை | 1 00 |
| திரு. | M- யாதப்பன் கடவளை | 1 00 |
| திரு. | V. வீரம்மாள் கடவளை | 50 |
| திரு. | S. முனியாண்டி கடவளை | 50 |
| | மொத்தம் | 1905 - 50 |



# காந்திக் கிராமம் - காந்தியத்தின் அற்புத கற்பகச் சோலை

கடந்த மார்கழி மாதத்தில் காந்திக்கிராமத்தில் நடந்தேறிய யுத்த எதிர்ப்பு மகாநாட்டில் கலந்து கொள்ள உலகின் நாலா பக்கங்களிலும் இருந்து வந்த பிரதிநிதிகளை திரு ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வரவேற்கும் சந்தர்ப்பத்தில், அவர் ஆற்றிய சொற்பொழிவில், "அவ்விடத்தைக் கண்டுபிடித்த பெருமை தமது மனைவியாரான டாக்டர் சௌந்தரம் அவர்களைச் சார்ந்ததென அடக்கமாசக் கூறிஞர் இக் காந்திக் கிராமத்திலே காந்தீய அடிப்படையில் ஆக்கவேலை புரிய, தமக்கு உதவக் கூடிய தொண்டர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்த பெருமையும் அந்த அம்மையாரையே சார்ந்ததெனப் பின்னர் அறிந்தோம். ஆனல் இந்த அம்மையாரைக் கண்டு பிடித்தபெருமை திரு. இராமச்சந்திரன் அவர்களைச் சேரும். குறித்த இவ்விரு பெருமைகளையும் விட இன்னுமோர் பெருமை இவ்விருவரையும் இல்லற வாழ்வில் ஒன்று சேர்த்த காந்தியடிகளுக்குரியதாகும். அவர்களின் திருமணம் வார்தாவில் காந்திஜீயின் முன்னிலையில் நடந்த ஓர் முக்கிய சம்பவமாகும்.

( க. இராமச்சந்திரன் )

இற்றைக்குப் பதின்மூன்றரை ஆண்டுகளுக்கு முன் இரண்டு ஓலைக்குடிசைகளில் இத்தம்பதிகளால் ஆரம்பிக்கப்பட்ட கிராமப் புணருத்தாரண சேவையானது வளர்ந்தும் பரந்தும் வந்தவிதம் அதிசயிக்கத்தக்கதொன்ருகும். இன்று காந்திக் கிராமம் நானூறு ஏக்கர் பூமியைக் கொண்ட பெரிய நிலையமாக மிளிர்கின்றது. அதன் சேவை அதனைச் சூழ உள்ள பல கிராமங்கட்குப் பரந்துள்ளது. காந்தியம் உதயமான பாரதநாட்டிலே

காந்திக்கிராமம் அதன் கற்பகச் சோலையாக விளங்குகின்றது. காந்தியத்தின் ஆக்கவேலைக்கு அதுஓர் இணையற்ற எடுத்துக் காட்டாகவும் இருக்கின்றது. இக்காரணங்களால் இந்நிலையத்திற்கு ஆசாரிய வினோபாஜி, டாக்டர் இராஜேந்திர பிரசாத், டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு ராஜாஜி, ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆதியோர் விஜயஞ் செய்து அங்கு நடைபெறும் அரிய ஆக்க வேலைகளைப் பாராட்டிப் பேசியுள்ளனர். அம்மட்டோ! உலக சமாதான மகாநாடு அண்மையில் ஆங்கு நடைபெற்ற காரணத்தால், அது காந்தியடிகள் விளக்கிய அஹிம்சா முறையில் உலக சமாதானத்திற்கு வித்திட்ட புனித க்ஷேத்திரமாகவும் விளங்குமென்பதில் ஐயமில்லை.

ஆரம்பத்தில் குழந்தைகளின் ஆரம்ப கல்விக்காக ஒரு சிறு பள்ளிக்கூடமும், நோயாளிகளின் சேவைக்காக ஓர் வைத்திய நிலையமுமே இருந்தன. ஆனால் இன்று அங்கே நடக்கும் தொண்டு இருபத்தைந்து பிரிவுகளாக விரிந்துள்ளது. ஆசிரியர் பயிற்சிக்கூடம், தாதிகள் பயிற்சி நிலையம் கிராமசேவகர் பயிற்சிக்கூடம், விவசாயக் கல்லூரி, சர்வோதய ஐக்கிய வங்கி, சாந்தி சேனை ஆதியன, அவற்றுள் முக்கிய இடம்பெறுகின்றன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் தேர்ச்சியுடைய ஆசிரியர்கள் இங்கே பயிற்சி பெறுகிறார்கள்.

இனி, காந்திக்கிராமத்தில் நடந்தேறிய உலக சமாதான மகாநாட்டுக்கு ஆசிமொழி கூறிய வினோபாஜி அவர்கள் காட்டும் உயரிய வழிபற்றிச் சிறிது ஆராய்வோம். அங்கு குழுமிய பிரதிநிதிகளின் சிந்தனைக்கு அவர் கருத்துக்கள் அரிய விருந்தாயின. வினோபாஜி அவர்களின் கருத்தின்படி இன்றைய உலகில் இரு சக்திகள் இயங்குகின்றன. ஒன்று இம்சை சக்தி; மற்றது தண்ட சக்தி. சில சமயங்களில் தானாகவே இயங்கும் இம்சை சக்தி, வேறு சில சந்தர்ப்பங்களில் கட்டுப்பாடாகக் கூடிச்சேர்ந்து இயங்குகிறது. இவ்வாறு கட்டுப்பாடாக இயங்கும்போதே இராணுவம் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றுகின்றது.



முதலில் இராணுவத்தில் புரட்சி நடக்கும். பின் அதுவே அதிகாரத்தைக் கைப்பற்றும்; தண்ட சக்தியைக் கையாளத் தொடங்கும். இதன் பயனாக இன்று எகிப்திலிருந்து நேர்பாளம் வரையிலும் எல்லா நாடுகளிலும் குறிப்பிட்ட சில தனி மனிதர்கள் ஆட்சி நடத்துவதைக் காண்கின்றோம். இந்தியாவைப் பொறுத்தமட்டில் இந்தநிலை ஏற்படக்கூடாதென்பதே வினோபாஜியின் கோரிக்கை. காந்தியடிகள் போதித்த புதிய சர்வோதய சக்தியை விஞ்ஞானத்திற்குப் பொருந்த உருவாக்குவோமாயின், அது இம்சை சக்திக்கு நேர்மாறானதாகவும், தண்ட சக்தியிலிருந்து வேறானதாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை, என்கிறார் வினோபாஜி. இவ்வித மூன்றாவது சக்தியைத் தோற்றுவிப்பதானது மக்களின் முக்கிய கவனத்தை ஈர்க்க வேண்டுமென வற்புறுத்துகின்றார்.

எனவே, குறித்த மகாநாட்டில் சாந்திசேனையைப்பற்றிய விஷயம் முக்கிய இடம் பெற்றது. இன்றைய உலகநெருக்கடி பற்றியும், சாந்திசேனையின் அத்தியாவசியம் குறித்தும் திருமதி அஷாதேவி அரியநாயம் உருக்கமாகப் பேசியபோது சபையில் இருந்தோர் சகலரும் கண்ணீர் விட்டனர். தலைமை தாங்கிய ஸ்ரீஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் மூக்குக்கண்ணாடியுடன் குறிப்பெடுக்க முடியவில்லை. பலதரம் அதனை அகற்றி, கண்ணீரைத் துடைக்கும் தேவை ஏற்பட்டது.

மேலும், இருவாரங்கட்கு முன் சர்வோதய சக்தியைப் பற்றிக் குறிப்பிடும்போது வினோபாஜி அவர்கள் வெளியிட்ட அருங்கருத்தொன்று இக்கட்டுரையில் இடம்பெறுதல் உசிதமெனப்படுகிறது. அவர் கூறியதாவது:-

"இன்று நம்மிடையே ஒருபெரிய குறையொன்று உள்ளது. ஆண்களிற் பெரும்பாலோர் பழைய வரலாற்றின் ஊடே மிதந்து கொண்டிருப்பதால் பழைய முறையிலேயே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். வேறுவழியிற் சிந்திக்க அவர்களால் முன்னையந்த மாற்ற முடிவதில்லை. இதன்பயனாக தீர வேண்டிய சிக்கல்களெல்லாம் மேலும் மேலும் சிக்கல்களாகின்றன. இந்த நிலையை மாற்றியமைக்க நமது சர்வோதய சக்தி

யொன்றே வழி. ஆனால் அந்தச் சக்தி புகுந்து செயற்படுவதற்கு அரசியலில் புகுந்து கெட்டுப்போகாத ஆன்மாக்கள் வேண்டும். நான் இதுபற்றி யோசிக்கும் போதெல்லாம் எனக்கு நம் சகோதரிகளின் நினைவுதான் வருகின்றது. அவர்கள்தான் இதுவரை அரசியலில் உழன்று அறிவைக் கெடுத்துக் கொள்ளாதிருக்கின்றனர். எனவே பெண்கள் முயன்றால் எவ்வளவோ சச்சரவுகளைத் தீர்த்து வைக்க முடியும். அஹிம்சா மார்க்கம் பெண்களுக்கே உரியது. அன்பு வழியில் - கருணை வழியிற் செல்வதற்கென்றே பிறந்தவர்கள் அவர்கள்"

வினோபாஜி தந்துள்ள இந்த இலக்கணத்திற்கு அரிய உதாரணமாக அமைந்துள்ளது காந்திக்கிராம நிர்வாகம். நாயகர் புதுடில்லியில் தொண்டாற்ற, திருமதி டாக்டர் சௌந்தரம் இராமச்சந்திரன் அவர்களே காந்திக்கிராமத்தின் முழு நிர்வாகப் பொறுப்பையும் தாங்கி நடத்துகின்றார்.

காந்திக்கிராமத்தில் தினந்தோறும் மாலையில் நடைபெறும் சர்வசமய சமரசப் பிரார்த்தனை, இங்கு குறிப்பிட வேண்டிய பிறிதொரு முக்கிய விஷயமாகும். இக்கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுவதற்கு 'அன்னபூர்ணா பந்தல்' என்னும் அழகிய பெரிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. மூவாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வசதியாக அமர்ந்திருந்து அமைதியாகத் தியானம் செய்யக்கூடிய விஸ்தாரமுடையது, அம்மண்டபம். முதலில் தோத்திரப் பாடல் பாடப்பெறும். அதன்பின் கீதை, திருமந்திரம், தம்மபதம், பைபிள், திருக்குரான் ஆதிய நூல்களிலிருந்து சில பகுதிகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வாசிக்கப்படும். அதன்பின் தியானமும், முடிவில் ராமநாம சங்கீர்த்தனமும் நடைபெறும், பெரியோர் எவராவது விஜயம் செய்தால் அவரது பிரசங்கமும் பத்து நிமிடங்களுக்கு இடம்பெறும். மகாநாடு கூடிய காலம் மார்கழி மாதமாகப் பொருந்தியதால் பிறிதோர் அரிய காட்சியும் எமக்குக் கிடைத்தது. மேற்கூறிய புதிய வழிபாட்டு முறையோடு பழமையும் பிணைந்திருந்த தானது, ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் எவர்க்கும் அளவற்ற மகிழ்ச்சியையும், புதிய உற்சாகத்தையும் ஊட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. நாம் இங்கு குறிப்பிடுவது அதிகாலை நான்கு மணியளவில் கன்னியர்கள் கூட்டமாகச் சேர்ந்து தோத்திரங்கள் பாடிக்கொண்டு வீதிகளைச் சுற்றிவந்த காட்சியாகும். காந்திக்கிராமத்தில் தங்கியிருந்த ஒன்பது நாட்களிலும், எனது மனோரதமானது மாணிக்கவாசகர் கண்ட திருவண்ணாமலையையும், ஆண்டாள் பாடிய கோகுலத்தையும் சதா சுற்றிக் கொண்டிருந்தது.



ஓம்

# மகாத்மாவின் மணிக்குரல்!

கடவுள்

1 உண்மையே தெய்வம்; உயர்அஹிம்சா சாதனமே
நன்மைவழி யாம்;அதனை நாடு!

2 வினைக்குத் தகுந்த விதிவகுக்கும் ஈசனே,
அனைத்துயிர்க்கும் ஆதார மாம்!

3 நோக்கம் நிறைவேற மாந்தர்தமை நுண்கருவி
யாக்குகிறான் பேரிறைவன்; ஆம்!

4 இறைவனே பாருக் கெஜமான்;நம் திட்டமெலாம்
அரைக்கணத்தில் மாற்றிடவல் லான்!

5 எல்லா மதத்துமுளான் ஈசன்ஒருவன்; அவனே
எல்லா உயிர்க்குமினி யான்!

6 திறந்தவெளி யே,இதயம் திறந்த பிரார்த்தனைக்குச்
சிறந்ததிருக் கோயிலெனத் தேர்!

7 உண்மை உழைப்பாளிக் குண்டென்றும் பேரிறைவன்
திண்மைத் துணையாம் திரு!

8 படைத்தவனின் இச்சையினைப் பாரினில்எச் சக்தியுமே
தடுத்ததிது காறுமிலைத் தான்!

9 எல்லாமும் வல்ல இறைவா,இம் மாந்தர்க்கு
நல்லிதயப் பண்பாட்டை நல்கு!

10 என்னைக்காப் பாற்றுதற்கோர் ஈசன் இருக்கையிலே,
என்ன கவலையெனக் கே!

அகிம்சை

11 அகிம்சையெனும் நேர்வழியை அன்றியிலை துன்ப
மிகுந்தபுவி உய்யவழி வேறு!

12 பலவீனன், பேதை, பயங்கொள்ளி ஏந்தான்,
வலிமிக்க பேரகிம்சை வாள்!

13 கடினமிகு நல்லொழுக்கக் காவலிலார்க் கில்லை,
படிமீ தகிம்சா பலம்!

14 கோழைசாத் வீகம் அகிம்சை யெனக்கொள்ளல்,
நீளிரவைப் பகலென்னல் நேர்

15 சரியாய் அகிம்சையின் தத்துவத்தைக் கண்டொழுகின்
அரிய பயனெல்லாம் ஆம்!

16 அஞ்சா தகிம்சைவழிச் செல்வோன்,ஓர் நாள்,அவனி
தன்சார்பிற் காணத் தகும்

சத்தியம்

17 எத்தனைதான் பேராற்றல் எய்திடினும், பொய்யொ (ழிந்து
சத்தியமே வெற்றி தரும்!

18 அத்தனைக்கும் அப்பால், அமைந்தமகா சக்தியை,யான்
சத்தியமென் பேன்,அதனைச் சார்ந்து!

19 சத்தியத்தைப் பூரணமாய்த் தாங்கும் வலியுடையார்
இத்தலத்தில் யாரும் இலை!

20 ஆத்திரத்தை அன்பால், அசத்தியத்தைச் சத்தியத்தால்
மாத்திரமே வெற்றிபெறல் மாண்பு!

பரமஹம்ஸதாசன்

ஆண்டவனைப் பதியாக அடைந்து, ஆண்டவனிடம் கலந்து பொருத்தமாக வாழ்பவனே பக்தன்.



# பகவான் விரும்புவது பக்தி

— சுவாமி அபேதாநந்தா —

பகவான் எங்கும் வியாபித்துள்ளான். ஸர்வ சக்திமானுகத் திகழ்கின்ற பரம்பொருள் நம் பகவான். வாழ்க்கைப் பிரகடனத்தில் கிருபாமயனுன நம் பிரபு நம்முடன் கூடி வாழ்கிருர். நம்மை எல்லாத் துன்பங்களிலிருந்தும் மீட்க நம் அப்பனின் இணையிலாக் கரங்கள் நம்மைப் பின்பற்றி வருகின்றன. இதை உணர்ந்துகொள்ள முடியாத மூடர்களாய் நாம் இருக்கிறேம். 'சரணம் சரணம்' என்று கூக்குரல் போடும் பொழுது நமக்கு அவன் காட்சி தருகிருன். வறண்டு கிடக்கும் இதயத் தடாகத்தில் பக்தி வெள்ளம் எப்பொழுது பெருகுகின்றதோ அப்பொழுது அவன் காட்சி கிடைக்கும். விஸ்வரூபியான அவன் பக்தி ஒன்றுக்கே கட்டுப்படக் கூடியவன். பக்திதான் அவனுக்குப் பிரியமானது.

நாஹம் வேதைர்ன தபஸா ந தானேன ந சேஜ்யயா!
ஷக்ய ஏவாம்விதோ த்ருஷ்டும் த்ரிஷ்டவானஸிமம் யாதா!!
பக்த்யா த்வனன்யயா ஷக்ய அஹ மேவம் விதோர் ஜூன!
ஞாதும் த்ரஷ்டும் சதத்வேன ப்ரவேஷ்டும் ச பரந்தப!!

என்று கீதையில் பக்தியின் பெருமையை எடுத்துக் காட்டுகிருர் பகவான். பக்திக்கு வயதோ, காலமோ, உருவமோ, கல்வியோ, செல்வமோ, பெருமையோ தேவையில்லை. ஐந்து வயதுச் சிறுவன் துருவனுக்கும் ஆசார நிஷ்டையில்லாத கசாப்புக்காரனுக்கும், 'ஆதிமூலம்' என்று கதறிய கஜேந்திரனுக்கும், வறுமையே உருவெடுத்தாற் போலத் திகழ்ந்த குசேலருக்கும் கண்ணன் தரிசனம் எப்படிக் கிடைத்தது? பகவானுக்குப் பிரியமான, அவனைக் கட்டக் கூடிய பிரேமை, பக்தி அவர்களிடத்து நிறைந்திருந்தது. இந்தப் பக்தி ஒன்றுதான் நமக்கு கதி. ஒருமுறை அதைப்

பருகினால் பிறகு மறக்கவே முடியாது. மனக்கலக்கம் தெளிந்து நாம் அமைதி எய்துவோம்.

விருப்பு வெறுப்பற்று வைராக்யம் எனும் குன்றில் ஏறி நிற்போம். இதற்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீ சுகர் திகழ்கின்றார். தாயின் கர்ப்பத்தில் கிடைத்த ஞானமானது வெளியே வந்தால் யோக மாயையால் தம்மை விட்டு அகன்றுவிடும் என்ற காரணத்தால் கர்ப்பத்தினின்று வெளிவராமலே இருந்தார்.

யோகமாயை தன்னைக் கட்டுப்படுத்தாதிருக்க தன் தந்தையாகிய வியாழ பகவானிடத்து உபதேசம் பெற்ற பிறகே தம் பன்னிரண்டாவது வயதில் வெளி வருகிறார். வெளியில் வந்த ஸ்ரீ சுகருக்கு தந்தை இப்பிரபஞ்சத்தின் இன்பத்தை எடுத்துக்கூறி உலகத்தில் ஈடுபடுத்தச் செய்த முயற்சிகள் யாவும் வீணாயின. உலகத்தில் கிடைக்கும் ஆனந்தமனைத்தும் அஞ்ஞானத்திலிருந்து பிறப்பது என்றுணர்ந்த ஸ்ரீ சுகர் தந்தையை வினவுகின்றார். தாங்கள் கூறுகிறபடி தந்தையானவன், புத்திரன் பிறப்பதால் 'புத்' என்ற நரகத்தில் இருந்து கரையேற்றப்படுகிறான் என்றால், பன்றி, நாய் முதலிய பிராணிகளுக்கு எப்பொழுதும் நரகம் ஏற்படாதன்றோ? உலகத்தில் நீண்டகாலம் வாழ்வதனாலேயே முக்தி கிடைக்கிறதென்றால், பெரிய வயதான மரங்கள் ஏன் முக்தி அடையவில்லை? ஆதலால், அக் ஞானத்தினால் பிணைக்கப்பட்ட உலகத்துடன் தனக்கு எவ்வித பந்தமும் இல்லை என்று ஓடும் மகன் பின்னால் மிக்க துயருடன் 'மகனே மகனே' என்று கூவியபடி பின் தொடரும் ஸ்ரீ வியாசருடைய அழைப்பு உலக சிந்தனை அற்ற, ஆசாரியனாக விளங்கும் ஸ்ரீ சுகப்பிரும்மத்தின் செவிகளில் விழவில்லை.

பிரபஞ்சம் அநித்தியமானது என்று தோன்றியதால் ஸ்ரீ சுகருக்கு எப்படி வைராக்யம் ஏற்பட்டதோ அவ்விதம் பக்தனுக்கும் ஏற்பட வேண்டும். பகவானிடத்துச் செலுத்தும் தீவிரபிரேமையே பக்தி. தாய்க்குச்சேயிடத்திலுள்ளகாதலும், மனைவிக்குக் கணவனிடத்துள்ள காதலும், லோபிக்குத் தன் பொருளிடத்துள்ள காதலும் ஒன்றாய்ச் சேர்ந்து, ஆண்டவனிடத்துத் தோன்றும் ஆவேசமே பக்தி.



அப்பியாசமும், வைராக்யமும்தான் பக்திக்கு உகந்த சாதனை. பாசியுள்ள குளத்தில் பாசியைக் கைகளினால் நீக்கி ஸ்நாநம் செய்து கரை சேர்ந்தவுடன் திரும்பவும் பாசியானது மூடிக் கொள்கிறது. அதுபோல பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்யுமளவு உலகத்தைப் பற்றிய சர்வ எண்ணங்களும் விலகி நின்று நாம ஸங்கீர்த்தனம் முடித்ததும் மறுபடியும் நம்மை அவை மூடிக் கொள்ளாவண்ணம் தீவிர வைராக்யத்துடன், இறைவனிடம் ஏற்பட்ட காதல் மறைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதை அப்பியாச வைராக்யத்தால்தான் அடைய முடியும். அப்பியாசம் என்பது இறைவனைச் சரணடைவதே.

இறைவன் நாமத்தை இடைவிடாமல் ஒரு மனதுடன் உச்சரிக்கும் எந்த மனிதனும் நாசமடைவதில்லை. துயர் நிறைந்த இவ்வுலகிலிருந்து விடுபடுவதற்கு உபாயம் பகவானைச் சரணடைவது ஒன்றேயாகும். மற்றவை எல்லாம் மேலும் மேலும் துயரத்தையே கொடுக்கும். பிறப்பிற்கு மரணம் பகைவன். பொருளுக்குத் திருடன் பகைவன். அழகிற்கு விருத்தாப்பியம் பகைவன் இப்படி இவையெல்லாம் ஓயாது கவலையைக் கொடுத்துக் கொண்டேதான் இருக்கும். எடுத்த பிறப்பு பயனடைய வைராக்யம் தேவை. எந்த நிமிஷமும் மரணத்தை வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும். நமக்குக் கிடைத்திருக்கும் குறுகிய வாழ்நாளை வீணாக்காமல் ஒவ்வொரு விநாடியும் பகவானைச் சரணடையும் வேலையில் ஈடுபட்டு அவன் கிருபையால் அவனை அடையவேண்டும்.

இறைவனிடத்து அடங்காப் பிரேமை ஏற்படும்பொழுது அவன் கிருபையால் அப்பியாச வைராக்கியம் ஏற்பட்டால் 'பக்தி' என்னும் மேன்மைக் காதல் ஏற்படும். 'ஸத்சங்கம்' அதனை வளரச் செய்யும். எத்தகைய பாடுபட்டே

னும் காதல் கொள்ள வேண்டும். இறைவனை இதயத்தில் பூரணமாக நிரப்ப வேண்டும். இதயத்தைச் சுத்தமாக வைத்திருந்தால்தான் அதில் இறைவன் வீற்றிருப்பான். அடக்கப்பட்ட புலன்களுடன், சுத்தமான இருதயம் உண்டாகும் பொழுதுதான் இவ்வுலகத்தைப் பகவான் மயமாகக் காணமுடியும். அப்பொழுது காணும் சராசரங்களையெல்லாம் கைகூப்பி வணங்குவோம். அவனையன்றி அன்னியமாய்க் காணவோ, கேட்கவோ பக்தனால் முடியாது. சுருங்கச் சொல்லின் பக்தன் பகவானுடைய தன்மையை எய்துகிறான். இந்த ரகசியத்தை அனுபவித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும். குருநாதன் கிருபையால் பக்தி ஏற்பட்டு சாந்தி ஏற்படுகிறது. பக்தியே சாந்திக்கு ஆதாரம். உலக வாழ்வை ஞானி மாயையாகக் காண பக்தன் அதை பகவானின் லீலையாகக் காண்கிறான். ஆகையால் கணநேரமும் வீணாக்காமல் அவன் நாமத்தைப் பஜிப்போமாக. அப்பியாச வைராக்யத்தை நிலைநிறுத்தி, பகவானைச் சரணடைந்தால் நமக்கு நிச்சயம் சாந்தி ஏற்படும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


## திருமுறைக் காட்சி

ஆத்மஜோதியில் தொடர்பாக மேற்படி தலைப்பின் கீழ் வெளிவந்த 23 கட்டுரைகள் முதலாம் பகுதியாக வெளிவந்துள்ளன. (167 பக்கங்கள்)

நால்வர் மத்தியிலே!
நடராசர் திருவுருவம், மூவர்ணப் படத்துடன்;
அருள்வடிவாய் விளங்குகின்றது.
விலை 1 ரூபா 50 சதம். தபாற் செலவு 35 சதம்.
இந்தியாவில் உள்ள அன்பர்கள்
R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம் - 2
என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.
இந்தியாவில் விலை 1 ரூபா 50 நயா பைசா.
புக் போஸ்ட்டில் சார்ச்சு 20 நயா பைசா.
பதிவுத் தபால் மூலம் 70 நயா பைசா.
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டியா, சிலோன்.




# சுத்தானந்தரின் கடிதங்கள் 8

காட்டுப்புத்தூர்

வீர-ஸ்ரீ. வ. வே. சு. ஐயர்

அவர்களுக்கு நமஸ்காரம்- தங்கள் நட்பை எனக்குத் தந்த வள்ளுவர் வாழ்க! குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தேன்; எனது ஆசிரிய நண்பர் ஒருவர் "இதோ ஐயர் மொழிபெயர்ப்பு" என்று தந்தார் படித்தேன். இதுதான் சரியான மொழி பெயர்ப்பு என்று என் முயற்சியை நிறுத்திக்கொண்டு தங்களை அறியலானேன். தங்களை அறியாதவர் இல்லை; இந்தியாப் பத்திரிகையில் தாங்கள் எழுதிய இலண்டன் கடிதகளும் கரிபால்டியும் எனது தேசாவேசத்திற்கு விறுவிறுப்பளித்தன; எனினும் எனது நண்பரான கோடிஸ்வர ஐயர் பி. ஜீ. சுந்தரமையர் வேங்கடராம சாஸ்திரியார் டி வி சாஸ்திரியார் முதலியோர் தங்கள் அருமை பெருமைகளைப் பற்றிச் சொன்னபோது, இராமர் மகிமையைக் கேட்ட மாருதி போலானேன்! இவர்கள் அனைவரும் தங்களுடன் பழகியவர்கள்; அறிவும் திருவும் மிக்க கனவான்கள்; "உங்களைக் கண்டால் ஐயர் விடமாட்டார்" என்று சாஸ்திரியார் கூறுகிறார்; அவரைக் கண்டால் நானும் விடமாட்டேன் என்று பதில் சொல்லி வருகிறேன். தங்களைக் கண்டு என் அந்தரங்கங்களைத் தாங்கள் அறியும் சுப தினம் சீக்கிரம் வரட்டும்.

'கம்ப நிலைய' வெளியீடுகளை சர்மாவும் கோடீஸ்வரையரும் தந்தார்கள். எல்லாம் அற்புதம்! கம்பராமாயணம் தங்களால் புத்துயிர் பெற்றது. உலக மகா காவியங்களில் அதற்கே முதலிடம் அளித்து வந்தேன். கம்பனின் ரசனைத் திறமை, வேறெங்கும் காணமுடியாத கலைச்சிறப்பு என்ப

தைத் தங்கள் முன்னுரை உணர்த்தியது. பாட்டைப் பதம் பிரித்திருப்பது கம்பனை எளிதாக்கிப் பூட்டை உடைத்து விட்டது; இனி எல்லாத் தமிழரும் கம்பக் கோயிலுட் சென்று கலாதேவியைக் காணலாம். சில பழம் பண்டிதர்கள் இன்னும் கறபுரு மோஸ்தரில் மோகங் கொண்டலைகிறார்கள். அவர்கள் காலம் மலையேறிவிட்டது. தமிழ் மறு மலர்ச்சியடைந்து விட்டது. நமது கவி பாரதியார் பாடல்களும், தங்கள் வசனமும் தமிழுக்குப் புதிய அழகையும் எழிலையும் உயிர்ப் பொலிவையும் தந்திருக்கின்றன. பாரதியாரின் கண்ணன் பாட்டும், குயிற் பாட்டும், பாஞ்சாலி சபதமும் ஷெல்லி, கீட்ஸ், போன்ற கவிகளை மிஞ்சி விட்டன என்ன எளிய தெளிவு: எவ்வளவு வசீகரமான நடை; எவ்வளவு ரஸமான விஷயம். பாரதியாருக்கு எனது உருக்கமான அன்பைச் சொல்ல வேண்டும்.

என்னைப் பற்றித் தங்கள் நண்பர் எழுதிய கடிதத்தில், நான் பாரதசக்தி மகாகாவியம் செய்துவருவதைக் குறித்திருக்கிறார். என் வாழ்வு முழுவதையும் அக்காவியமாக உருச்செய்திருக்கிறேன். ஆழ்ந்த நிஷ்டையிலிருந்து எழுந்த வாக்கைக் கொண்டு அதன் சொல்லும் பொருளும் அமைந்துள்ளன என்பதைத் தங்களைப் போன்ற ரசிகரே உணர்கிறார்கள். ஒவ்வொருகவியும், தன்னையே உருக்கி வார்த்துக் காவியமாக்குகிறான்; என் அனைத்தையும் ஆவியின் ஆர்வமெல்லாம் இக்காவியமாக உருக்கி வார்த்திருக்கிறேன். அதன் ஆரம்பப் பகுதிகளைத் தங்களுக்கு இத்துடன் பதிவுத்தபாலில் அனுப்புகிறேன். என் சார்பாக ஒரு நண்பரும் தங்களைக் காண்பார். அவர்மூலம் ஒரு நாடகமும் சில பாடல்களும் வரும். எல்லாம் மனம்போலப் பார்த்து என்னை ஆசீர்வதிக்க வேண்டும். மாசற்ற உள்ளங் கொண்ட தங்கள் ஆசியால் எனக்கு நன்மையுண்டாகும். நண்பர்மூலம், நம் நிலையப்பணிக்கு என்னாலான காணிக்கை வரும்; தமிழ்த்தாயின் பெயரால் ஏற்றுக்கொள்ள வேண்டும். என் காவியத்தை, வரகவி சி. சுப்பரமணிய பாரதியாரிடமும் காட்ட வேண்டும். அவர் ஆசியையும் ஆவலாக எதிர்பார்க்கிறேன் அன்பன், சுத்தானந்த பாரதி.

காட்டுப்புத்தூர்

வீரத்திருவாளர் வ. வெ. சு. ஐயர்

அவர்களுக்கு நமஸ்காரம்.

தங்கள் அன்புரைகள் எனக்கு ஊக்கமும் தைரியமும் உற்சாமுகம் அளித்தன. நண்பர் தங்கள் காட்சியை ராமன் காட்சிபோல் வருணித்தார்; பாரதசக்தி தங்களுக்கும் கவி பாரதியாருக்கும் மகிழ்ச்சியளித்தது; எனக்குத் தைரியமளித்தது. தங்கள் ஆசி பெற்ற பிறகு பேனாவிற்குப் புதிய வேகம் வந்துவிட்டது. இனிக் காவியம் முடிந்ததுபோலத்தான்.

இவ்வொரு காவியத்தை நான் நல்ல முறையில் நகாசு செய்து தமிழன்னைக்குச் சூட்டினாலும் போதும்.

நிற்க, எனக்கு உத்தியோகக் கட்டுப்பாடு பிடிக்கவில்லை. எனது ஜீவனத்திற்குப் போதிய வட்டி வரக்கூடிய தொகை சேர்த்து பாங்கில் போட்டுவிட்டேன். இனி இந்த அடிமைத் தொழிலைப் பரித்யாகம் செய்து சுதந்திரமாக யோகமும் பொதுநல சேவையுமாக எனது வாழ்வைக் கழிக்கத் தீர்மானித்து விட்டேன். அதற்கேற்றபடி தான் இங்கே இடர்களும் சோதித்து என்னை முன்னே தள்ளுகின்றன. அன்னியக்கல்வி முறை நம்மை ஆளாக்காது. பழைய பிரமசரிய குருகுலக்கல்வி முறையுடன் தற்காலத்திற்கு வேண்டிய விஞ்ஞானமும் சேர்ந்த புதிய கல்விமுறையை அமைக்க வேண்டும். அதைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்து ஒரு நூலும் எழுதிவைத்திருக்கிறேன். தமிழருக்கென்று ஒரு குருகுல நிலையம் வேண்டும். நலந்தாவும், சாந்திநிகேதனும், சபர்மதியும், ஆக்ஸ்போர்டும் சேர்ந்த அகண்ட அத்யாத்ம வித்யாலயமாக அது விளங்க வேண்டும். தங்கள் உத்தேசமும் இப்படியிருப்பதாகவே நண்பர் சொன்னார்.

தங்களைச் சென்னை வந்து காண பரதன்போலக் காத்துக்கொண்டிருக்கிறேன். தங்கள் அன்பன் சுத்தானந்தபாரதி.

காட்டுப்புத்தூர்

வீர ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் அவர்களுக்கு வணக்கம்.

தீரச்சிங்கமே! தேசபக்தனுக்கு நல்வரவு! சென்னைக்கு வந்த தாங்கள் தேசபக்தனில் பேனா

நாட்டிய நாள் நன்னுள். தேசபக்தன் தலையங்கம், அரசியல் இலக்கியமாகஇருக்கிறது; மஜினியின் "யங் இதாலி" போலத் தங்கள் பத்திரிகை பொலிக!

எனது முதல் நூலை இன்று அனுப்பியுள்ளேன்; அதிலுள்ள குறைகளைக் காட்டி, நாடகம் இன்னும் எப்படித் திருந்த வேண்டும் என்பதை உணர்த்தியருளுக. கவிதை நாடகம் இவற்றில் எனக்கு உற்சாகமிருக்கிறது; ஆனுல் கலை என்பது அனுபவத்தீயில் புடம் வைத்துவைத்தே மாற்றேறி விளங்க வேண்டும்.

ஏப்ரில் ஓய்வில் தங்களைக் காண நினைக்கிறேன். இக்கூண்டைவிட்டுச் சுதந்தரமாகத் திரிய எனது ஜீவப்பறவையும் சிறகடித்துத் துள்ளுகிறது. நான் பகிரங்கமாகவே மஹாத்மாவின் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறேன். லோகமானியர் இறந்த நாளன்று ஒரு பொதுக்கூட்டத்தில் கண்ணீர் விட்டு அனுயாசமாகப் பாடினேன். அது முதல் எனக்குத் தேசவெறி பிடித்திருக்கிறது. தெய்வவெறியுடன் கலந்து, இப்போது கட்டுகளை உடைக்கிறது. இங்கே கிலாபத் இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறேன்; கதர் வளர்ச்சியில் என்னுலானதைச் செய்கிறேன்; கரூரில் அடிக்கடி அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்கிறேன். அங்கே நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை எனது அரிய நண்பரானுர், சமீபத்தில் திருச்சி காங்கிரஸ் சபையின் கட்டளைப்படி நானும் மற்ருெரு நண்பரும் பல கிராமங்களில் காந்தீயப் பிரசாரம் செய்தோம். விபரம் பத்திரிகையில் கண்டிருப்பீர்கள். இப்படியெல்லாம் பண்ணக்கூடாது என்று என்னைச் சிலர் மிரட்டுகிருர்கள். அவர்களுக்கு விரைவில் ஒரேவரியிற் பதில் சொல்லிக் கிளம்பப் போகிறேன், பிறகு தவமும், தேச சேவையுந்தான் வாழ்வு. தங்கள் ஆசீர்வாபலத்தாலும், பரமாத்ம சக்தியாலும் எனது வாழ்க்கை பொதுநல யோகமாக வேண்டும்.



தாங்கள் அரசியல் சுழலில் நீந்திக்கொண்டிருக்கிறீர்கள். காலங் கிடைத்தபோது எனக்கு ஆறுதலாக ஒருவரி அனுப்பியருளுக.

வீரவிளக்கே! விக்ரமச்சிங்கமே! வ.வே. சுப்பரமணிய தீரனே! தீப்பொறி சிந்தும் சிங்கம்போலே, பாரததேவியின் பந்தனை தீர்க்க, வீறுகொண்டெழுந்த வித்தகா போற்றி; அரியைக் குகையில் அதிரப் பொருதினை; மராடிமணிக்கு மகுடமாய் வந்தாய்! செந்தமிழ் சிவாஜி நீ செய்த செயல்கள் இதிகாசத்திற் கினியவை யாகும்! கனிதமிழீன்ற கரிபால்டி நீயே! எமபடர்விழியை ஏய்த்துத் தனியாய்ப் புதுவை புகுந்தவுன் புகழையென் சொல்வேன்! புதுவையிலிருந்து நீ புரிந்த வீரம், சுந்தர வேள்விச் சுடரை வளர்த்தது; வள்ளுவர் குறளை, வரகவி கம்பனை, உலகம் அறியக் கலைவளர் செல்வா! என்னுளம் புகுந்த இனிய நண்பா! உன்னுடன் உள்ளம் ஒன்றி நின்று பொதுநல வேள்வி புரியும் வரத்தை இறைவன் அருளுக நிறைகலைவாண! கூட்டையுடைத்துக் குயிலுனைக் காணப் படபடவென்று துடிசிறை யடித்தது வருகிறேன் மணியே வருகிறேன் வீரவிளக்கே! வெற்றியுனக்கே! அன்பன் சுத்தானந்தன்

## திருப்பள்ளியெழுச்சியுரை

காரைநகர்க் கலைமகள் மன்ற வெளியீடு. திருவாசகம் என்பது மணிவாசகப் பெருமானுரின் அருள் கனிந்த பாக்கள். அவற்றுள் திருப்பள்ளிஎழுச்சி அதனை ஓதுவாரின் உள்ளத்தை எந்நேரமும் உணரவைக்குந் தன்மைது. அநுபவத்தின் சிகரமான பள்ளியெழுச்சிக்கு அநுபவம் முதிர்ந்த ஸ்ரீமத் சி. சுப்பிரமணியதேகசிர் அவர்கள் உரையெழுதியமை மிகப்பொருத்தமான தொன்ருகும்.

—★—

# வரவேண்டும் வள்ளி மணாளா

(சங்கீத பூசணம் அ. கி. எரம்பமூர்த்தி)

இராகம்:- சிம்மேந்திரமத்திமம் ஆரோகணம்:-ஸரி கம பத நிஸ 57வது மேள கர்த்தா
தாளம்:- ரூபகம் அவரோகணம் - ஸ்நிதபமகரிஸ

பல்லவி

வரவேண்டும் வள்ளி மணாளா நீ
வரமீந்து எனையாள மயில் மீதில்

அனுபல்லவி

சரவணபவ சண்முகா வேலா
சந்ததம் பணியும் என்சிந்தை மகிழ (வரவே)

சரணங்கள்

1 கருணைக் கண்ணும் கனிந்த சொல் வாயும்
அபயகரமும் வரத கரமும்
வரும் வினையறுக்கும் வேலும் விளங்க
வாடு மெந்தனுக்கிரங்கி வேகமாக (வரவே)

2 சிவனறு பொறி சரவணப் பொய்கை
சென்றறு சிசு வடிவாகிடச்
சிவசக்தி சிந்தை களித் தணைக்கவே
சேர் அறுமுகா பன்னிருகையனே (வரவே)



3 ரபிணவப் பொருள் தெரியாப் பிரமன்
சிரத்தினிற்குட்டிச் சிறையினில் வைத்தாய்
அரனுக்கு உபதேசமும் செய்தாய்
ஆண்டியானாய் குகா அம்பிகை சுதனே (வரவே)

4 தேவர்கள் சூரனால் நொந்துனைத் துதிக்கத்
திருவுளங் கனிந்தவனை அழித்துச்
சேவலும் மயிலுமாக நீ ஏற்றிட்டாய்
சேவடிநம்பினேன் தாமதஞ் செய்யாமல் (வரவே)

5 தெய்வ யானைதனைத் திருமணஞ் செய்து
தேவர்கள் போற்றிட நின்றகுமரனே
மையல் கொண்டு வள்ளிமானைப் புனத்தினில்
மாயங்கள் செய்து மணந்த முருகனே (வரவே)

6 ஔவையும் மகந்தை கொண்டதை நீக்கிட
ஆ மேய்க்கும் பையனாய் நாவற்கனி ஈந்தாய்
இவ்வுலகினிற் பிறந்து நொந்தலைந்தேன்
ஏழையுன்னடிமை இதுதருணம் (வரவே)

7 நக்கீரரின் முருகாற்றுப் படையேற்று
நாடிவந்த பூதங் கொல்லாது காத்திட்டாய்
பக்தி மிக்க அருணகிரி புகழப்
பாசமுடன் ஏற்றுப் பாவியேனும் பாட (வரவே)

ஆண்டவன் பால் சுரக்கும் ஆனந்தத்தைப் பருகிப் பேரின்பத்தில் திளைப்பவனே பக்தன்.

துன்பத்தைத் துடைத்து ஆண்டவன் அருளிய இன்பத்தை மக்களுக்கு ஊட்டுபவனே பக்தன்.

# எல்லோரும் வாழ வேண்டும்

பேராசிரியர். அ. மு. பரமசிவானந்தம்

மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வாறு 'நாடெங்கும் வாழவேண்டும்' என்று நினைப்பதுவே முறை - பண்பாடு- வாழ்க்கை - அனைத்தும். ஆனுல் இன்றைய உலகில் இவ்வாறு நினைக்கின்றவர்கள் வெகு சிலரே. நினைக்கின்றவர்கள் ஒருவர் கூட இல்லை எனச் சிலர் பேசுவார்கள் என்ருலும் வள்ளுவர் வாக்கின்படி அவ்வாறு நினைக்கக் கூடவில்லை. நல்ல பண்புடையார் வாழுகின்ற காரணத்திஞல்தான் உலகம் இன்னும் நிலைகெடாதிருக்கின்றது என்ற உண்மையை வள்ளுவர்,

'பண்புடையார் பட்டுண் டுலகம்
அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். ஆயினும் அவர்கள் ஆரவாரத்தையும் ஆடம்பர வாழ்க்கையினையும் விரும்பாராய் அமைதியாக எங்கோ ஒரு மூலையிலிருந்து கொண்டு மக்கட்பணியாற்றுவர். அல்லாதவரே எல்லாவற்றிலும் தம் பெயர் வரவேண்டுமென்ற ஆடம்பரத்தில் பறையறைந்து பாழ்பட்டு, மற்றவரையும் வாழவைக்காது கெடுவர். எனவே அறைபறையன்ன கயவர் வாழ் நிலமாயினும் இன்னும் சில நல்லவர்கள் நாட்டில்வாழ்கின்றமையின் நாம் இன்னும் சில ஆண்டுகள் அமைதியோடு வாழ்வோம் என்ற நம்பிக்கை பிறக்கின்றது. அந்த நம்பிக்கை நாட்டில் - உலகில் தளர்கின்ற வேளைகளில்தான் நல்லவர் தோன்றி வழிகாட்டுவர். நம் தலைமுறையில் அண்ணல் காந்தியடிகள் காட்டிய வழியினைக் கண்டோம். அவர் காட்டிய அன்பின் பரிவுக்கு நாம் தந்த பரிசு குண்டுகள் தாம்.

இன்று மக்களினம் சிறக்க வழியில்லை என்ற உணர்வு நம் நாட்டிலும் உலகின் பல பாகங்களிலும் நிலவிவருவதைக் காண்கின்ருேம். இதற்குக் காரணம் என்ன? மனிதன் மனிதனுக வாழவில்லை என்பதுதானே! தன்னைப் போல் பிறரை ஒத்து நோக்கி வாழ்வதே நல்வாழ்வு என்ற உண்மையை வரலாறு அறிந்த அந்த நெடுங்காலந் தொட்டே பல அறிஞர்களும், அறவோர்களும் கூறிக்கொண்டே வருகின்றனர். அதுவும் இன்று உரிமை பெற்றபின் இந்த இந்திய நாட்டில் இந்த உண்மையைப் பற்றிக் கூருத தலைவரே இல்லை எனலாம். இருப்பினும் மக்கள் சற்றும் இவ்வுண்மையை உணர்ந்ததாகவே தெரியவில்லை. ஆம். அதற்கு அடிப்படைக்காரணமென்ன? சுயநலமன்றி வேறு என்ன? இன்று மனிதன் சுயநலத்தின் உச்சிக் கோடியில் நிற்கின்ருன். நின்றுகொண்டு தான் ஏறிவந்த சமுதாயத்தையே வெட்டவும் தொடங்கி விட்டான். இந்தநிலை தொடர்ந்து நீடிக்கவிட்டால் அடிமரம் சாய்ந்து சமுதாயம் அழிவதோடு, வெட்டிய அந்த மனிதனும் ஒரு எலும்புகூட உருவாகக் காணமுடியாமல் அடியோடு கெட்டொழிவானே! எனவே தான் இன்றுவினேபாபாவே போன்ற நல்லவர்கள் அவனுடைய கொடுஞ்செயலை நிறுத்த முயல்கின்ருர்கள். முயற்சியின் வழி மனிதன் திரும்புவானுனல் நாடு திருந்தும் நாமும் வாழ்வோம்-

தமிழ்நாட்டில் அன்று தொட்டு வாழ்ந்த எத்தனையோ புலவர்கள் இந்த உண்மையை உணர்த்திக் கொண்டுதான் வந்துள்ளார்கள். சங்ககாலத்தில் இந்த உண்மையைப் பல புலவர்கள் தெள்ளத் தெளியக் காட்டியுள்ளமையைப் பல பாடல்கள் நன்கு எடுத்து விளக்குகின்றன. எத்துணைப் பெருஞ் செல்வத்தில் புரள்பவனுயிருப்பினும், அன்றி அற்றைக் கூழுக்கு அலமருபவனுக இருப்பினும் வாழ்க்கை ஒன்றே என்ற உணர்வு கொண்டுவாழ்பவர்களேமனிதராக எண்ணப்படுவார்கள். அந்த உணர்வில் செல்வன் தன்னை மறந்து மற்றவர்களுக்கு வாரி வழங்குவான். அந்த உணர்வில் நாட்டில் பொருளாதார ஏற்றத்

தாழ்வு இருக்க இடமில்லை. அதுவே சமதர்ம சமுதாயம் அமைக்கும் அரும்பண்பு இந்த உண்மையை அன்று வாழ்ந்த புலவருள் சிறந்தவராகிய நக்கீரர்,

'தென்கடல் வளாயம்
பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய
ஒருமையோர்க்கும்
நடுநாள் யாமத்தும்
பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும்
கல்லா ஒருவர்க்கும்
உண்பது நாழி
உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம்
ஒரொக்குமமே
செல்வத்துப் பயனே
ஈதல்
துய்ப்பேம் எனினே
தப்புந பலவே'

(புறம் 189)

என்று சமதர்ம வாழ்க்கையை நன்கு விளக்கி - எல்லோரும் வாழவேண்டும் என்ற உண்மையைக் காட்டி அந்த வாழ்வுக்குச் செல்வர்கள் செய்யவேண்டிய பணியையும் காட்டியுள்ளார். மற்றும் இந்த உலகமே அவ்வாறு தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் நல்லவர்களாலேதான் சிறந்து விளங்குகின்றது என்பதையும்' அவ்வாறு உள்ளதை மற்றவர்களுக்கு ஒளிக்காது கொடுப்பவர்களே உயர்ந்தவர் என்பதையும் பாண்டிய மன்னன் ஒருவன் நன்கு காட்டியுள்ளான். அமிர்தமாகிய சாவா மருந்தைப் பெற்றாலும் தனித்து உண்ணலாகாது என்றும், அவ்வாறு உண்ணாது மற்றவர்களுடன் பகிர்ந்து நாடு வாழும் வகையில் கலந்து உண்பவர்களே சிறந்த பண்பாளர்கள் என்றும், அவர்களாலேயே இந்த உலகம் இன்றளவும் கெடாது வாழ்கின்றது என்றும் அப் பாண்டிய மன்னன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி காட்டும் பாடல் சிறந்த ஒன்றாகும்.

உண்டால் அம்ம
இவ்வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவ
தாயினும் 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே,
முனிவு இலர்
துஞ்சலும் இலர், பிறர்
அஞ்சுவது அஞ்சி
புகழ் எனின் உயிரும்
கொடுக்குவர், பழிஎனின்
உலகுடன் பெறினும்
கொள்ளலர், அயர்விலர்
அன்ன மாட்சி,
அனையர் ஆகித்
தமக்கென முயலா
நோன்தாள்
பிறர்க்கென முயலுநர்
உண்மையானே'

(புறம் 182)



இவ்வாறு சங்ககாலப் புலவர் பல்லோர் சமதர்மச் சமுதாயம் அமையவேண்டிய தேவைபற்றியும், அதற்குரிய வழிகளைப் பற்றியும், எல்லோரும் இன்புற்று வாழும் அந்த வாழ்வே உலகில் அரும்பவேண்டும் என்பது பற்றியும், பதுக்கலும் கள்ளச் சந்தையும் கனவில் வரக்கூடாதன என்பது பற்றியும் எத்தனையோ வகையில் எடுத்துக் காட்டியுள்ளனர். வறுமையில் தலைப்பட்டு அதனால் அடியுற்று மிகக் கீழாகத் தாழ்த்தப்பட்ட புலவர் பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடித் தான்பெற்றுவந்த பொருளை வைத்துக் கொண்டு வல்லடங்கு வாழ்வோம் எனத் திட்டம் தீட்டாது, தன் மனைவியிடம் 'எல்லோர்க்கும் கொடுமதி' என்று கூறி வாரி வழங்கிய செயல் நாடறிந்த ஒன்றே. இவ்வாறு புலவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டியதோடன்றித் தாமே வாழ்ந்தும் காட்டிய நல்வழி இன்று நாட்டிற்குத் தேவையான ஒன்றாகும்.

இடைக் காலத்தில் வாழ்ந்த பல புலவர்களும் இந்த உண்மையை எடுத்துக் காட்டத் தவறவில்லை. கோசல நாட்டைப் பாடவந்த கம்பர், தனக்குமுன் வாழ்ந்த தமிழ் நாட்டுப் புலவர் தம் வாய்மொழிகளையெல்லாம் எண்ணியே,

எல்லாரும் எல்லாச் செல்வமும்
எய்தலாலே
இல்லார்களும் இல்லை உடையார்க
ளும் இல்லை மாதோ

என்று அழகான அடிகளால் சமதர்மசமுதாயத்தை அமைத்துக் காட்டினார். 'எல்லோரும் வாழவேண்டுமென்ற' கருத்து நல்ல புலவர்கள் உள்ளத்தில் தோன்றியுலகினை உய்விப்பதன்றோ! ஆகவே கம்பன் இந்த உண்மையைக் கோசலை நாட்டின் மேல் வைத்து உலகுக்கு விளக்கினான்.

கடவுளைப் பாடவந்த தாயுமானார் இந்தச் சமதர்ம வாழ்வை அந்த இறைவனிடம் வேண்டுகின்றார். ஆண்டவன் முன்னின்று அவர் தனக்கென வரம் வேண்டவில்லை. அவர்,

'எல்லாரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன்
பராபரமே'

என்றுதான் வேண்டுகிறார். ஆம்! அவர் வேண்டுகோள்

வழி, உலகில் வாழும் ஒவ்வொரு உயிரும் இன்பம் பெறவே அவர் ஆசைப்படுகின்றார் என்பது நன்கு வெளியாகின்றதன்றோ!

ஆம்! அன்று தொட்டு இன்றுவரை இந்த உண்மையை எல்லாரும் வாழ வேண்டும் என்ற உயர் நிலையை நல்லவர்களெல்லாம் பாடியும் வாழ்ந்தும் காட்டி உள்ளமையை அறிகின்றோம் இன்றும் இந்த நூற்றாண்டிலும் பாரதியும் காந்தியும் பிற நல்லவர்களும் பாடியும் வாழ்ந்தும் காட்டியுள்ளார்கள். விநோபாபாவே போன்ற பெரியவர்கள் இன்றும் நம்மிடை இந்த உண்மை ஞானம் வளர அல்லும் பகலும் ஒல்லும் வகையில் பாடுபட்டு உழைக்கின்றனர். அரசாங்கமும் எத்தனையோ வகைகளில் புதுப்புது வழிகளில் - புதுப்புது வரிகளில் - பொருளாதார ஏற்றத் தாழ்வைக் குறைக்க முயல்கின்றது. இருந்தும் அந்த நல்ல நிலை நாட்டில் மலரவில்லையே! ஏன்? மக்கள் மனமாற்றம் அடையவில்லை. நக்கீரர் தொடங்கி விநோபாபாவே வரையில் கூறிய அத்தனையும் மக்கள் மனதில் ஊன்றி நின்றும் அவர்கள் செயலாற்ற முடியவில்லை. ஏன்? இன்னும் அவர்கள் மனிதனாக வாழ முயலாமையே காரணமாகும். ஆனால் அத்தனை நல்லவர்களின் வாய்ச் சொற்களும் பொய்யாகமாட்டா. என்றாயினும் அவை பயன் தரத்தான் செய்யும்; அதற்குரிய சாத்தியக் கூறுகள் இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் அரும்பியுள்ளன. சிறப்பாக நம் நாட்டில் இன்று இந்த உணர்ச்சி மெள்ள மெள்ள செயல் வழிச் சிறக்கத் தொடங்குகின்றது. ஒரு சிலர் மனமாற்றத்துக்காக உலகம் காத்திருக்காது. மக்கள் மனமறிந்து அந்த ஒரு சிலர் மாறத்தான் வேண்டும். அதைக் காலம் விரைவில் செய்து முடிக்கும். ஆம்! 'எல்லோரும் வாழ வேண்டும்' என்று எல்லோரும் சேர்ந்து சொல்லி, செயலாற்றிச் சிறக்க வேண்டிய நாள் - வாழ்ந்து வளமுற்று ஓங்க வேண்டிய நாள் - கம்பரும் கீரரும் தாயுமானாரும் கண்ட நல்வாழ்வு மலரும் நாள் - அண்மையில் உள்ளது. அந்நாள் விரைந்து வருவதாக!

[ கிராம ராஜ்யம் ]



# உபநிஷத் உண்மைகள் 8

வித்துவான். மு. கந்தையா

கடோபநிஷத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் யமனுடைய உபதேசத்தில் ஆன்மாவைப் பற்றிய உண்மை பேசப்படுகின்றது. இந்த விஷயத்திற் புகுமுன் நாம் ஓர் உண்மையை மனதிற் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆன்மா என்ற சொல் உயிர், கடவுள் என்னும் இரண்டையும் குறிக்கும் சொல்லாக உபநிஷத்களிற் காணப்பட்டு வருகின்றது. உயிர்க்குங் கடவுளுக்குமிடையில் உள்ள கலப்புத் தன்மையாகிய சம்பந்தம் பற்றி, சில இடங்களில் உயிரோ கடவுளோ என வேறுபடுத்திக் காணமுடியாத வகையிற் கூட இச்சொல் இடம் பெற்றுள்ளது. உபநிஷத் கூறும் தத்துவஞானம் ஒரேயடியாக வேதாந்தமே என்ற கருத்தும் இதுபற்றி எழுந்ததே யாகும்.

**ஆத்மாவைப் பற்றிக் கூறும் முதல் மந்திரம்:-**

'பலருடைய கேள்விக்கு அகப்படாதது; கேள்விக்கு அகப்பட்ட போதிலும் இத்தன்மையது எனப் பலரால் அறியப் படாதது. அதைப் பற்றிச் சொல்லக் கூடியவன் அருமை. அதை அடையக் கூடியவன் அருமை. திறமை வாய்ந்த ஆசாரியனொருவனால் உபதேசிக்கப் பட்டு அதை உள்ளபடி உணர்ந்தவன் அருமையில் அருமை'.

கல்வியினாலும் விஷயங்களை அறிதல் கூடும். ஆனால் கற்றன வெல்லாம் நமக்கு விளங்கி விடுவதில்லை. அதுபோலவே கேட்டனவு மெல்லாம் நமக்கு விளங்கி விடுவதில்லை. எமது அறிவுமுனை எதனை ஏற்கத் தகுதியுள்ளதாயிருக்கிறதோ அதை மட்டும்தான் ஏற்கும்; அறிவுமுனை எதையேற்கத் தகுதியற்றதாயிருக்கிறதோ அதனை எவ்வளவு திணித்தா

லும் அது ஏற்காது. சாதாரணமான அறிதல் விஷயத்திலேயே இவ்வளவு தடையுண்டு.

உலகசம்பந்தமான விஷயங்களைப் பற்றிச் சொல்லக் கேட்டால் நம் அறிவுமுனை பெரும்பாலும் அவற்றைப் பற்றிக் கொள்ளும். ஆன்மசம்பந்தமான விஷயங்களைப் பற்றிச் சொல்லக் கேட்டால் நம்மறிவு இலகுவிற் பற்றிக் கொள்ளாது. புண்ணிய வசமாகச் சிலருடைய அறிவு இதனைப் புரிந்து கொள்ளுதல் கூடும். புரிந்து கொண்ட சிலருள்ளும் ஒருசிலர் மட்டுந்தான் தாம் கேட்டதை விளங்கிக் கொள்ளல் கூடும். அவருள்ளும் அதிர்ஷ்டவசமாக ஆரேனொருவர் தானும் ஆத்மா என்ற அப்பொருளைப் பற்றிக் கொள்கின்றாரா என்பது சந்தேகம். ஆன்மாவைப் பற்றிப் பிறர் சொல்வதைப் பற்றிக் கொள்ளுதல் வேறு; ஆத்மாவைப் பற்றிக் கொள்ளுதல் வேறு. இந்த விஷயம் மிகக் கஷ்டமானது: மெத்தக் கடினமானது. 'மெத்தக் கடினம் ஐயே' என்ற நந்தனார் கூற்று என்றுமே நினைவு கூர்தற்குரியது.

எவ்வளவைத்தான் கற்றுக் கற்று மனம் அலுத்தாலும் கேட்டுக் கேட்டுச் செவியலுத்தாலும், அறிவுக்குமேல் அறிவு தேடிக் களைத்தாலும் ஆன்மாவை அறிதலும், அதனைக் காண்டலும் இவ்வெல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட செய்தியாகும். அறிவின் எந்தப் பேரெல்லையில் நின்று கொண்டாயினும் கடவுள் இங்கேதானா என்று வினாவினால், இல்லை; அப்பால் என்ற பதில் கிடைக்கின்றது. மாணிக்கவாசக சுவாமிகள், 'அப்பாலைக் கப்பா என இருமடி அப்பால் கொடுத்தும், அப்பர், அப்பாலைக்கப்பால் லைக் கப்பாலான்' என மும்மடி அப்பால் கொடுத்தும் இதனையுணர்த்தியருளினார்கள்.

பொருளைப் பெறும் விஷயத்தில் மூன்று தன்மைகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. ஒன்று சாத்தியம். மற்றையது கஷ்டசாத்தியம். மூன்றாவது சாத்யாசாத்தியம். ஆன்மாவைப் பற்றுதல், இவற்றில் மூன்றாவதாகும். சாத்யமாகும் நிலையிலேயே அசாத்தியமாயும் நிற்பது அது. 'இதோ கிடைத்து விட்டது' என்னும் நிலையிலேயே கிடையாமல்



ஒதுங்கி விடவுங் கூடியது. பயிலுந்தோறும் பயிலுந்தோறும் ஒளித்து நிற்பது. "பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும் ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்"; "கண்டுங் கண்டிலேன் என்ன கண் மாயமே!" என்கின்றது மாணிக்கவாசக சுவாமிகள் அனுபவம்.

இத்தகைய இப்பொருளை, இந்த ஆன்மாவைத், தன் சிரத்தை விசேடத்தினாலே யாரேனுங் கண்டு காட்டினாலல்லது காணமுடியாது; தன் தீவிர சக்தியினாலே யாரேனும் பற்றிப் பற்றுவித்தாலல்லது பற்ற முடியாது. அத்தகைய ஒரு மகா நிபுணனாக வாய்க்கும் ஒருவர் குருவெனப்படுவர்.

ஆன்மாவைப் பற்றிக் கேட்டல் அருமை. கேட்டாலும் அதை அறிதல் அருமை. அறிந்தாலும் அதைக்காட்டக் கூடிய குரு அதனிலும் அருமை. இவ்வுண்மை குறித்த மந்திரத்தில் அருமையாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த உண்மையைத் தொடர்ந்து வற்புறுத்தி ஆன்மாவை யறிவிக்கக் கூடியவர் எப்படியானவரா யிருத்தல் வேண்டும் என்பதை அடுத்த மந்திரம் எடுத்துக் கூறுகின்றது.

'தாழ்ந்த மனிதனாற் சொல்லப் பட்டால் இந்த ஆன்மா அறிந்து கொள்ளத் தக்கதன்று. ஏனெனில் அது பலவிதமாகச் சிந்திக்கப் பட்டிருக்கின்றது. பிரமத்திடம் அபேத புத்தியுள்ளவரால் உபதேசிக்கப்பட்டால் இதில் விகற்பச் சிந்தனைக்கு இடமேயில்லை. அணுவுக்கும் அணுவாயிருப்பதால் இதைத் தர்க்கத்தால் அறிய முடியாது என்பது அடுத்த மந்திரம்.

காண்பார் தங் காட்சியாயும், அதே நேரம் காட்சிக் கதீதமாயும் நிற்பது அவ்வான்மாவின் இயல்பு. அதனால் அதனைப் பலரும் பலவிதமாகச் சிந்தித்துள்ளார்கள், இது வல்ல, அதுவல்ல என்று தமக்குள்ளே பிணங்கியுள்ளார்கள். இந்நிலையில் அது நிற்குந் தன்மையே ஒருபெருங் கருணை விளையாட்டென்று கூறி ஆராமையுறுகின்றார் தாயுமான சுவாமிகள்.

'பேசரிய ஒளியென்றும் வெளியென்றும் நாதாதி
பிறவுமே நிலய மென்றும்
தன்னே ரிலாததோர் அணுவென்றும் மூவிதத்
தன்மையாங் காலமென்றுஞ்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
சதா ஞான வானந்தமாய்
என்னே யெனே கருணை விளையாட் டிருந்தவா
றெம்மனோர் புகல வெளிதோ' - தாயுமானவர்

இத்தகைய இப்பொருளை உபதேசிக்குங் குரு நிச்சயம் மேலோனாகவே யிருத்தல் வேண்டும். பிரமத்தைப் பற்றிய அறிவிற் பேதலிக்குந் தன்மையில்லாது ஸ்திர புத்தியுள்ளவனாதல் வேண்டும்.

ஒருபொருளை எடுத்துக் கொண்டு உருவமோ அருவமோ என்று காணும்; ஆராய்ச்சி, ஆராய்ச்சியின் முதற்படியாகும். அவ்வாராய்ச்சி உலகின் மற்றெல்லாப் பொருள்கட்கும் பொருந்துமாதலால் ஆன்மாவென்ற பொருளில் மட்டும் அவ்வாராய்ச்சி செல்லவே செல்லாது. மற்றைய பொருள்கள் ஒன்றில் உருவமாக அல்லது அருவமாக உள்ளவை. ஆன்மாவை உருவமென்றோ அருவமென்றோ சொல்லுதலமையாது. இது உருவமென்றால் கண்ணுள்ளோர் அனைவர்க்கும் அது புலனாகவேண்டும். அருவமென்றால் எவர் கண்ணுக்கும் எக்காலத்தும் புலப்படாததாதல் வேண்டும். ஆன்மா அவ்விருதன்மையுமுடையதன்று. சாதாரணமா எல்லார் காட்சிக்கும் இலகுவிற் புலப்படுவதன்று. நுண்ணுணர்வுடைய ஒரு சிலர் காட்சிக்குமட்டும் அரிதிற் புலப்படுவது. எனவே அதை அணுவெனனல் ஆகுமோ எனின் அதுவும் பொருந்தாது. பலவாந் தன்மையும் பகுக்கப்படுந் தன்மையும் உள்ள பொருள்களெல்லாம் படைக்கப்பட்ட பொருள்கள். அணுவும் அத்தன்மையுள்ளது. ஆகவே, ஏகமா யிருப்பதும் இன்னொருவராற் படைக்கப் படாததுமாகிய ஆத்மா அணுவன்று. மேலும், அந்த அணுவையும் இயக்குந் தன்மையுள்ளதாயிருத்தலின், அத்தன்மைபற்றி அது அணுவுக்கும் அணுவாயிருப்பதென்றும் அத்தகைய ஒன்றைத் தர்க்கித்துக் காணுவது முடியாது என்றும் இம் மந்திரம் விளக்குகின்றது. - தொடரும்.

# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

## வெள்ளிவிழா நாமலிகித ஜெபம்

### பெப்ரவரி மாதம் முடிய உள்ள கணக்குவிபரம்

| | |
|---|---|
| சென்ற மாதக் கணக்கு | 16817317 |
| ஊவாக் கட்டவளை | 6000 |
| உ[illegible]ன் | 91710 |
| பள்ளக்கலே | 96034 |
| இயக்கச்சி | 9520 |
| சாம்பற்தீவு | 150000 |
| உடுவில் | 12675 |
| சண்டிலிப்பாய் | 15840 |
| நாகெனித் தோட்டம் | 2000 |
| கட்டுவன் | 12000 |
| கொழும்பு | 39128 |
| காங்கேசன்துறை | 12240 |
| பதுளை | 19400 |
| நாவலப்பிட்டி | 26874 |
| கல்லெல்ல | 6720 |
| கல்மடு | 9351 |
| மத்துகமப்பட்டினம் | 29342 |
| மதுகெதறத் தோட்டம் | 16702 |
| சென் ஜோட்ஜ், தோட்டம் | 12320 |
| கீக்கிளகந்த, தோட்டம் | 4000 |
| மத்துகமத் ,, | 8320 |
| இலப்பந்துறப் பட்டினம் | 7380 |
| பாந்திய தோட்டம் | 12072 |
| கல்வயல் | 4350 |
| ஊரெழு | 3240 |
| மிருசுவில் | 2720 |
| தெல்லிப்பளை | 9834 |
| கற்றன் | 45945 |
| திமிலைத்தீவு | 8064 |
| தபோவனம் கண்டி | 8456 |
| திரிகோணமலை | 329000 |
| கொட்டகலை | 61380 |
| சுதுமலை | 4000 |
| புலோலி | 1200 |
| கல்பொட | 31472 |
| [illegible]ல்லூர் | 1160 |
| மதுரை | 6230 |
| டம்பாரைத்தோட்டம் | 4000 |
| இலப்பந்துற தோட்டம் | 6480 |
| மூதூர் | 42280 |
| லேன்ஸ்டவுண் | 68215 |
| கழுவாஞ்சிக்குடி | 5625 |
| மாணிக்கவல்லித்தேட்டம் | 22000 |
| அல்லிதோட்டம் | 33986 |
| மொத்தம் | 18116582 |

Registered at the G. P. O. as a News Paper M. L. 59-300


## சர்க்கரை கொல்லி சூரணம்

(DIABETES) என்னும் நீரழிவு. மதுமேகம் சர்க்கரை வியாதிக்கு மிகச் சிறந்த சூரணம்.

நீரில்வருகிற சர்க்கரையைப் போக்கி புளிப்புச்சத்தை குறைத்து கொழுப்பு ரஸனேகள் போவதைத் தடுத்து சப்ததாதுக்களின் தித்திப்பைக் குறைக்கும் அற்புதஔடதம் யாவும் மூலிகையினுல் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 6 ரூ 75 ச.

இலங்கையில் கிடைக்குமிடம்

ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

இந்தியாவில் கிடைக்கும் இடம்:-

**சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2(S. I.)**

மலாயாவில் கிடைக்குமிடம்:-

**மு. கணபதி அன் கம்பெனி**

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ.


## சந்தா நேயர்களுக்கு

ஜோதி எடுக்கும் சந்தா நேயர்கள் அனைவரும் தமது சந்தாப் பணங்களை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். பணம் அனுப்பும்போதும் விலாச மாற்றம் செய்யும்போதும் சந்தா இலக்கத்தைத் தவறாது குறிப்பிட வேண்டுகின்றோம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம் 2.

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ்விடமும் அறியத்தருக.

ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி.
(சிலோன்)

Printed & Publihed by Mr N. Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
at ATHMAJOTHI PRESS, NAWALAPITIYA (Ceylon) 14-3-61